**O.S.No. 4/2021**

**Date 27.06.2025**

**வா.சா1 கடற்கரை**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது காவலாளியாக வேலை செய்து வருகிறேன். நான் குடியிருக்கும் வீடு பிரதிவாதிகளின் வீடும் ஒரே தெருவில் உள்ளது என்றால் சரிதான். இறந்துபோன குமரேசன் அலங்காரி என்ற பலசரக்கு கடை வைத்து நடத்தி வந்தார் என்றால் சரிதான். மேற்படி குமரேசன் அவர் இறந்த கால கட்டத்தில் இந்தியன் வங்கியில் வரவு செலவு கணக்கு வைத்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி குமரேசன் எவ்வளவு காலம் பழக்கம் என்றால் 15 ஆண்டு பழக்கம். மேற்படி குமரேசன் பெற்ற கடனை அவரது மனைவியிடம் எப்போது கேட்டேன் என்றால் அவர் இறந்த மறுநாளே கேட்டேன். மேற்படி குமரேசன் 29.11.2019 ல் இறந்துவிட்டார். எந்த இடத்தில், எப்போது யார் முன்னிலையில் கடன் கொடுத்தேன் என்று பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். நான் தாவா காசோலைகளை 01.12.2020 ல் நான் வங்கியில் வசூலுக்காக கொடுத்தேன் என்றால் சரிதான். தாவா கடன் வாங்கியதாக சொல்லக்கூடிய கால கட்டத்தில் குமரேசனுக்கு சங்கரன்கோவில் இந்தியன் வங்கியில் மிகை பற்று கடன் கணக்கு இருந்தது, மேற்படி கணக்கில் 35 லட்ச ரூபாய் வரை பெற்றுக்கொள்ளலாம் என இருந்தது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் கூறும் கால கட்டத்தில் அவருக்கு பண தேவை இருந்ததிருந்தால் வங்கியில் இருந்து எடுத்திருப்பார் என்றாலும், என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் அல்ல என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் குமரேசன் எந்த காலத்திலும் என்னிடம் கடன் பெறவில்லை என்றாலும் மோசடியாக காசோலைகளை உற்பத்தி செய்து வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் கூறியது போல் இறந்து போன குமரேசன் 01.12.2020 தேதியிட்டு எந்த காசோலையும் எனக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா காசோலைகளை தவிர வேறு எந்த காசோலையும் எனக்கு இறந்து போன குமரேசன் எந்த காலகட்டத்திலும் கொடுத்தது கிடையாது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் தாவா காசோலைகளில் பெயர், தொகை விவரங்களை நானாகவே எழுதி மோசடியாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

வழக்கில் ஒரே தினத்தில் இரண்டு வெவ்வேறு நேரங்களில் இரண்டு வெவ்வேறு தொகைகளை கடனாக பெற்றுக்கொண்டு இரண்டு வெவ்வேறு காசோலைகளை கொடுத்தாக கூறுவது பொய்யானது என்றால் சரியல்ல. இறந்து போன குமரேசனின் குடும்பத்தாரை தெரியுமா என்றால் அனைவரையும் தெரியும். 4 ம் பிரதிவாதி ஆறுமுகம் பிள்ளை இறந்துபோன குமரேசனின் தகப்பனார் ஆவார். மேற்படி ஆறுமுகம் பிள்ளை என்னிடம் எந்த கடனும் பெறவில்லை. மேற்படி ஆறுமுகம் பிள்ளையிடம் தாவா கடன் குறித்து கேட்டேன். வழக்கு விவரங்கள் பொய்யானது என்றாலும், சட்டத்திற்கு புறம்பாக இறந்துபோன குமரேசனின் காசோலைகளை மோசடியாக உற்பத்தி செய்து, வசூலுக்கு செலுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரை விவரங்கள் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. எந்த கடனும் இறந்துபோன குமரேசன் பெறவில்லை என்றாலும் பிரதிவாதிகள் குமரேசனின் சொத்துக்களை அடையாததினாலும், மோசடியாக காசோலைகளை பெற்று இவ்வழக்கினை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை பொறுத்து இவ்வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள காசோலைகள் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றால் சரியல்ல. நான் கூறும் காசோலை வழங்கிய நபரான குமரேசன் வசூலுக்கு செலுத்திய காலத்தில் உயிருடன் இல்லாத காரணத்தினால் அந்த காசோலைகள் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 காசோலை ஆக்சிஸ் வங்கி கணக்கு இறந்துபோன குமரேசனால் முடிக்கப்பட்டது என்றாலும் முடிக்கப்பட்ட கணக்கில் இருந்து காசோலை வழங்கியதாக கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் இவ்வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**